## பள்ளிக் கல்வித்துறை
## பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்
## புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம் 2023-24

www.Padasalai.Net

**2024 மார்ச் மாதம் 17-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ள புதிய பாரத எழுத்தறிவுத் திட்டக் கற்போருக்கான அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு நடத்துவது சார்ந்த வழிகாட்டு நெறிமுறைகள்**

| | | |
|---|---|---|
| **1.** | **தேர்வு நடைபெறும் நாள்** | **2024 மார்ச் மாதம் 17 ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை)** |
| **2.** | **தேர்வு நடைபெறும் நேரம்** | **காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை** |
| **3.** | **தேர்வு நடைபெறும் மையம்** | **கற்போர் எழுத்தறிவு மையம் செயல்படும் பள்ளி வளாகம்** |
| **4.** | **தேர்வர்களை பதிவு செய்வதற்கான இறுதி நாள்** | **தேர்வு நடைபெறும் நாள் வரை** |

**5. தேர்வு நடத்துவது சார்ந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

- தமிழ்நாட்டில் 15 வயதிற்கு மேற்பட்ட எழுதப்படிக்கத் தெரியாத அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிக் கல்வி வழங்கிட வேண்டும் என்பதே வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் முதன்மையான இலக்காகும். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து (38) மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்ற புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் கடந்த செப்டம்பர்-2023ஆம் மாதம் முதல் பயின்று வரும் அனைத்து கற்போருக்கும் இறுதி அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு வருகின்ற 17.03.2024 (ஞாயிற்றுக் கிழமை) அன்று நடத்தப்பட வேண்டும்.

- கற்போருக்கேதுவாக மையம் சார்ந்த பள்ளி வளாகத்திலோ அல்லது அவர்கள் பணிபுரியும் இடத்திலோ அல்லது கற்போர் மாற்றுத்திறனாளியாகவோ அல்லது மூத்த கற்போராகவோ இருப்பின் அவர்களுடைய இல்லங்களிலோ இந்த அடிப்படை தேர்வை எழுத அனுமதிக்க வேண்டும்.

- நிருணயிக்கப்பட்ட இலக்கின் படி அனைத்து கற்போரும் தேர்வில் கலந்து கொள்ளும் வகையில் உரிய நடவடிக்கைகளை எழுத்தறிவு மையம் சார்ந்த ஆசிரியர் பயிற்றுநர். தலைமையாசிரியர், பள்ளி உதவி ஆசிரியர் மற்றும் தன்னார் வலரால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- 17.03.2024அன்று தேர்வு நடைபெறும் மையங்கள். கற்போர் எண்ணிக்கை. தன்னார்வலர்கள் உள்ளிட்ட விவரங்களை அனைத்து மாவட்ட மற்றும் ஒன்றியங்கள்அளவில் தேர்வு நடைபெறும் நாளுக்கு முன்னர் (16.03.2024) அனைத்து மாவட்டங்கள், ஒன்றியங்கள் மற்றும் மையங்கள் அளவில் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

- கற்போருக்கேதுவாக, தேர்வு எழுதுவதற்கான இருக்கை வசதிகள், குடிநீர் வசதி. கழிவறை வசதி, மின்சார வசதி, வயதில் மூத்த மற்றும் மாற்றுத்திறனாளிக் கற்போருக்கேதுவான சாய்தள நடைபாதை போன்ற வசதிகள் இருப்பதை அந்தந்த எழுத்தறிவு மையம் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரால் உறுதி செய்யப்பட வேண்டும்.

- இத்தேர்வினை மிகவும் கவனமுடன் மந்தனத்தன்மையுடன் நடத்தப்பட வேண்டும்.

**6. வினா விடைத்தாள், இதர படிவங்கள் மற்றும் பேனா ஆகியனவற்றை அந்தந்த ஒன்றியங்கள் வாயிலாக எழுத்தறிவு மையங்களுக்கு வழங்குதல்-**

- **வினா-விடைப் புத்தகத்தில் வினாக்களுக்குரிய மதிப்பெண்கள் வழங்கப்படும் முறையானது "மதிப்பெண் X வினா = மதிப்பெண்" என்கிற அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன.**

- ஒவ்வொரு மையத்தின் கற்போர் எண்ணிக்கைக்கேற்ப வினா விடைத்தாள் கட்டுகள் 15.03.2024-க்குள் சார்ந்த வட்டார வள மையங்களுக்கு அந்தந்த மாவட்ட அலுவலகத்தால் வழங்கப்பட வேண்டும்.
- வினா-விடைத்தாள் அடங்கிய உறையின் மேல் எழுதப்பட்டிருக்கும் எழுத்தறிவு மையத்தின் பெயர், அம்மையத்தில் பயிலும் கற்போரின் எண்ணிக்கைக்கேற்ப வினா -விடைத்தாள்களின் எண்ணிக்கை, வருகைப் பதிவு படிவம், மதிப்பெண் படிவம். பேனா ஆகியனவற்றை அந்தந்த ஒன்றியத்திற்குட்பட்ட மையங்களின் விவரங்களின் அடிப்படையில் சரிபார்த்து சார்ந்த வட்டார வள மைய (பொ) மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்களால் 15.03.2024-க்குள் பெற்றுக் கொள்ள வேண்டும்.
- வட்டார வள மைய (பொ) மேற்பார்வையாளர் ஒன்றியத்திற்குட்பட்ட கற்போர் எழுத்தறிவு மையங்களுக்குத் தேவையான வினா -விடைத்தாள் கட்டுகள், படிவங்கள், பேனா ஆகியனவற்றை 16.03.2024 அன்று மாலை எழுத்தறிவு மையம் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரிடம் ஒப்படைத்து தேர்வு தொடங்கும் வரை பாதுகாப்பாக வைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
- தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடத்திற்கு முன்னர் வரை வினா விடைத்தாள் கட்டுக்களை எக்காரணம் கொண்டும் பிரிக்கக்கூடாது.

7. தேர்வு அறை செயல்பாடுகள்

- **வினா-விடைத்தாள், கற்போர் வருகைப் பதிவுப் படிவம், மதிப்பெண் படிவம் மற்றும் பேனா ஆகியன தேவையான எண்ணிக்கையில் பெறப்பட்டுள்ளதை தேர்வு நடைபெறும் நாளுக்கு முதல் நாளே (16.03.2024) எழுத்தறிவு மையம் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரால் உறுதி செய்யப்பட வேண்டும்.**
- தேர்வு முதன்மைக் கண்காணிப்பாளராக பள்ளியின் தலைமையாசிரியரும். அறை கண்காணிப்பாளராக தன்னார்வலரும் செயல்பட வேண்டும்.
- கற்போர் தன் விருப்பத்திற்கேற்பவும், வசதிக்கேற்பவும் தேர்வு நடைபெறும் நாளன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை தேர்வு எழுதலாம். ஒரு கற்போருக்கான மொத்த தேர்வு நேரம் -3 மணி நேரம் ஆகும்.
- தேர்வு நடைபெறும் நாளில் கற்போரின் வருகையை, வருகைப் பதிவுப் படிவத்தில் தன்னார்வலர்கள் பதிவு செய்ய வேண்டும்.

8. வினா-விடைத்தாள் ஒப்படைத்தல்

- 17.03.2024 அன்று மாலை 5 மணிக்கு தேர்வு முடிந்ததும் வினா விடைத்தாள்களை பதிவெண் வாரியாக அடுக்கி பாதுகாப்பாக கட்டி உறையில் வைத்து அந்த உறையின் மேல் எழுத்தறிவு மையத்தின் முகவரி உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய முகப்புத் தாளை ஒட்டி தலைமையாசிரியர் மற்றும் தன்னார்வலர் கையொப்பத்துடன் அன்றே வட்டார வள மைய அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.
- வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் இவ்விடைத்தாள்களை மதிப்பீட்டுப் பணி முடியும் வரை மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

www.Padasalai.Net

**9. தேர்வு கண்காணிப்பு**

**அ. ஒன்றிய அளவில் தேர்வு மேற்பார்வை:**

- தேர்வு நடைபெறும் அனைத்து எழுத்தறிவு மையங்களையும் பார்வையிடும் வகையில் ஒன்றிய அளவில் வட்டாரக் கல்வி அலுவலர், வட்டார வள மைய மேற்பார்வையாளர், ஆசிரிய பயிற்றுநர்கள் ஆகியோரை கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்க வேண்டும்
- தேர்வு நாளன்று ஒவ்வொரு கண்காணிப்பு அலுவலரும் குறைந்த பட்சம் 10 தேர்வு மையங்களையாவது பார்வையிட்டு முதன்மைக் கல்வி அலுவலரிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

**ஆ. மாவட்ட அளவில் தேர்வு மேற்பார்வை:**

- தங்கள் மாவட்டத்தில் நடைபெறும் அடிப்படை எழுத்தறிவுத் தேர்வினை முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர், மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி) ஆகியோர் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்ட உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரும் தேர்வு மையங்களைப் பார்வையிட வேண்டும்.

**இ. மாநில அளவில் அலுவலர்கள் தேர்வு மேற்பார்வை**

- தேர்வு நடைபெறும் எழுத்தறிவு மையங்களை பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்கக இயக்குநர். இணை இயக்குநர், தொழில்நுட்ப அலுவலர் களப்பணி அலுவலர் மற்றும் SCAL-ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் மேற்பார்வையிடுவர்.

**குறிப்பு:**

- **தேர்வு நடைபெறும் நாளன்று ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை எத்தனை கற்போர் இத்தேர்வில் பங்கு கொண்டனர் என்ற எண்ணிக்கை விவரத்தினை அந்தந்த வட்டார வளமைய (பொ) மேற்பார்வையாளர்களிடமிருந்து சார்ந்த மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பெற்று அவ்விவரங்களை குறுஞ்செய்தி மூலம் இவ்வியக்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.**

**10. அனைத்து வட்டாரவளமைய அளவில் விடைத்தாள் திருத்தும் பணி மற்றும் மதிப்பெண் விவரங்களைக் கணினியில் உள்ளீடு செய்தல் செயல்பாடுகள்:**

- விடைத்தாள்களின் எண்ணிக்கைக்கேற்ப வட்டார வளமைய (பொ) மேற்பார்வையாளர் / ஆசிரியர் பயிற்றுநர்கள் / தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி உதவி ஆசிரியர்களை விடைத்தாள் திருத்தும் பணிக்கு நியமனம் செய்துகொள்ள வேண்டும்.
- ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 30 வினா விடைத்தாள் என்ற வீதத்தில் 19.03.2024 ஆம் தேதி முதல் 23.03.2024 வரையிலான 5 நாட்களுக்குள் விடைத்தாள்கள் திருத்தி முடிக்கப்பட வேண்டும்.
- இப்பணி மந்தணத்தன்மை குறையாமல் வட்டாரக் கல்வி அலுவலர் தலைமையில் வட்டார வள மைய (பொ) மேற்பார்வையாளர் கண்காணிப்பில் நடைபெற வேண்டும்.
- விடைத்தாள் திருத்தும் பணி முடிவுற்ற பின்னர் வட்டார வளமைய அளவில் மதிப்பெண் பட்டியல் தயாரிக்கப்பட்டு இவ்வியக்கத்தால் வழங்கப்பட்டுள்ள கற்போர் மதிப்பெண் ( Excel ) படிவத்தின்படி கற்போரின் மதிப்பெண் விவரங்கள் 28.03.2024-க்குள் பதிவேற்றம் செய்து முடிக்கப்பட வேண்டும்.

www.Padasalai.Net

**11. மாவட்ட அளவில் மதிப்பெண் விவரங்களை வட்டார வள மையங்கள் (BRC) வாரியாகத் தொகுத்தல்**

- வட்டார அளவில் தயார் செய்யப்பட்ட கற்போர் மதிப்பெண் பட்டியல் (Excel) 03.04.2024 ஆம் தேதிக்குள் மாவட்ட அலுவலகத்திற்கு மின்னஞ்சல் வாயிலாக சார்ந்த வட்டார வளமைய (பொ) மேற்பார்வையாளரால் அனுப்பப்பட வேண்டும்.

- அனைத்து வட்டார வளமையங்களிலிருந்தும் பெறப்பட்டு, மாவட்ட அளவில் தொகுக்கப்பட்ட மதிப்பெண் பட்டியல் விவரங்கள் அனைத்தும் குறுந்தகட்டில் (CD)- இல் பதிவு செய்யப்பட்டு, அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி உதவி திட்ட அலுவலர் ஆகியோரின் கையொப்பம் மற்றும் அலுவலக முத்திரையுடன் கூடிய முகப்புக் கடிதத்துடன் இணைத்து 10.04.2024-க்குள் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககத்திற்கு பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இக்கற்போர் மதிப்பெண் பட்டியலை (Excel) இவ்வியக்க மின்னஞ்சல் முகவரிக்கு (dnfae.tn16@gmail.com) அனுப்பப்பட வேண்டும்.

**12. தேர்வு மைய கண்காணிப்பு, விடைத்தாள் மற்றும் கணினியில் உள்ளீடு செய்வதற்கான மதிப்பூதியம்**

- 17.03.2024 அன்று நடைபெறவுள்ள தேர்வு கண்காணிப்புப் பணிக்காக மையம் ஒன்றுக்கு ரூ.200 வீதம் எனக் கொண்டு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு ரூ.100/-ம், மையத் தன்னார்வலருக்கு ரூ.100/-ம் மதிப்பூதியமாக வழங்கப்படவேண்டும்.

- விடைத்தாள் திருத்தும் பணிக்கு ஒரு விடைத்தாளுக்கு ரூ.1/- வீதம் எனக் கொண்டு மற்றும் கணினியில் உள்ளீடு செய்திடும் ஆசிரியர் பயிற்றுநருக்கு/உதவி ஆசிரியருக்கு ஒரு கற்போருக்கு ரூ.1/- வீதம் எனக் கொண்டு விடைத் தாள் திருத்தும் பணி நிறைவடைந்த பின்னர் வழங்கப்பட வேண்டும்.

- மதிப்பூதியங்கள் அனைத்தும் ECS வாயிலாக மட்டுமே வழங்க வேண்டும்

- இச்செலவினங்களை இத்தேர்வு சார்ந்து வழங்கப்பட்டுள்ள இவ்வியக்கக செயல்முறைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்புகள் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வழிமுறைகளின் படி மேற்கொள்ளவேண்டும்.

**13. கற்போருக்கு சான்றிதழ் வழங்குதல்**

- புதிய பாரத எழுத்தறிவுத் திட்ட விதிகளின்படி கற்போருக்கு அடிப்படை எழுத்தறிவுச் சான்றிதழ் தேசிய திறந்த நிலைப் பள்ளி நிறுவனம் (NIOS) வாயிலாக வழங்கப்படும்.

இயக்குநர்